## இயல் நான்கு

# சென்னையில் உள்ள நவக்கிரகக் கோயில்கள்

இயல் - நான்கு

# சென்னையில் உள்ள நவக்கிரகக் கோயில்கள்

உலகையும், உலகில் வாழும் உயிர்களையும் படைத்து அனைத்து உயிர்களையும் பாதுகாப்பவள் பராசக்தி. அவளுடைய ஆணையை ஏற்று நவக்கிரகங்களாகிய கோள்கள் பூமியில் வாழும் சீவராசிகளான மனிதர்களுக்கு அவரவர் வினைப்பயன்களுக்கேற்பச் சுக துக்கங்களை அறியச் செய்கின்றன.

நவக்கிரகங்கள் மனிதனின் உடலில் ஒவ்வோர் அங்கத்திலும் பொறுப்பேற்றுச் செயல்படுவதாக நம்பப்படுகிறது. இதற்குச் சான்றுரைக்க வேண்டுமெனில் ஒரு மன்னன் தனக்குரிய நிலப்பகுதியை ஆளுவதற்கு பிரதிநிதிகளை நியமனம் செய்து ஆட்சி செய்வது போன்று ஒவ்வொருவரின் கர்ம வினைகளுக்கும் நவக்கிரகங்களே பொறுப்பேற்கின்றன என்று ஆன்மீகச் சான்றோர்கள் நல்லுரைகளை வழங்குகின்றனர்.

ஊழ்வினை காரணமாக உண்டாகும் கர்ம வினைகள் அதற்கேற்ற பயன்களை வழங்குகின்றன. மனிதர்களின் வாழ்க்கை முறையை நவக்கிரகங்கள் ஆட்சி செய்வதாகச் சோதிட நூல்களும், சோதிடவல்லுநர்களும் வரையறை செய்கின்றனர். நவக்கிரகங்களின் தீயபிடியிலிருந்து எவ்வகையில் விடுபடல் வேண்டு மென்றும் நவக்கிரகங்களை வணங்கும் முறை பற்றியும், வழிபாடுகளால் ஏற்படும் சிறப்புகள் குறித்தும் அறிய முடிகிறது. நாள் வழிபாடு, வாரவழிபாடு, ஆண்டுப்பலன்களை நாளேடுகள், சிறந்த வல்லுநர்கள் வழியாக நமக்கு அறிவிக்கிறது.

நாளும் கோளும் நலிந்தோர்க்கு இல்லையென்ற சிந்தனை ஒரு பக்கம் எழுந்தாலும் தெய்வநம்பிக்கை உடையவர்கள் நாள் பார்த்துக் காரியங்கள் செய்தால் நற்பயன் கிட்டும் என்று நம்புகின்றனர். அவ்வகையில் கர்மவினைகள் தொடரும் என்றெண்ணுவதால் நவக்கிரக வழிபாடுகள் நாடெங்கும் நாளும் வழிபடுபொருளாயிற்று.[1]

நவக்கிரகங்களை வழிபடும் மக்கள் பெருமளவில் தமிழகத்தில் உள்ளனர். பெரும்பாலும் தமிழக அளவில் மக்கள் சென்று வழிபடும் தலங்களாக ஒன்பது திருக்கோயில்கள் விளங்குகின்றன.

தமிழக அளவில் சிறப்புடைய நவக்கிரகக் கோயில்கள்.

| | **ஊர்** | | **கோயில் அமைவிடம்** |
|---|---|---|---|
| 1. | சூரியனார்கோயில் | – | சூரியன் |
| 2. | திங்களூர் | – | சந்திரன் |
| 3. | வைத்தீஸ்வரன் கோயில் (புள்ளிருக்கு வேளூர்) | – | அங்காரகன் (செவ்வாய்) |
| 4. | திருவெண்காடு | – | புதன் |
| 5. | ஆலங்குடி (தென்திட்டை) | – | குரு (வியாழன்) |
| 6. | கஞ்சனூர் | – | சுக்கிரன் |
| 7. | திருநள்ளாறு | – | சனி |
| 8. | திருநாகேஸ்வரம் | – | இராகு |
| 9. | கீழப்பெரும்பள்ளம் | – | கேது |

பல்வேறு நவக்கிரகத் தலங்களையும் நேரில் சென்று வழிபட இயலாத நிலையில் தமிழகத்தின் பல இடங்களில் நவக்கிரகங்களின் கோயில் பலவும் மக்களின் வணக்கத்திற்கு உரிய கோயில்களாக உள்ளன.[2] பெரும்பாலான

திருக்கோயில்களின் உள்ளமைப்பில் நவக்கிரகங்களை தனி மண்டபத்தே அமைந்துள்ளமையையும் காணமுடிகிறது.[3] இத்தகைய நவக்கிரகங்கள் மூலம் சென்னையின் பெருமையும் சிறப்பையும் அறிவதற்கும் இடமளிக்கிறது.[4]

சென்னை நகரில் அமைந்துள்ள சிறப்புடைய நவக்கிரக சந்நிதிகள் ஒன்பதாகும்.

| | கோயில் அமைவிடம் | இறைவன் | தனிச்சந்நிதி |
|---|---|---|---|
| 1. | கொளப்பாக்கம் | அகத்தீசுவரர் | சூரியன் |
| 2. | சோமங்கலம் | சோமநாதீசுவரர் | சந்திரன் |
| 3. | பூவிருந்தவல்லி | பூவைத்தீசுவரர் | அங்காரகன் |
| 4. | கோவூர் | சௌந்தரேசுவரர் | புதன் |
| 5. | போரூர் | ராமநாதேசுவரர் | குரு |
| 6. | மாங்காடு | வெள்ளீசுவரர் | சுக்கிரன் |
| 7. | பொழிச்சலூர் | அகத்தீசுவரர் | சனி |
| 8. | குன்றத்தூர் | நாகேஸ்வரர் | ராகு |
| 9. | கெருகம்பாக்கம் | நீலகண்டேஸ்வரர் | கேது[5] |

போன்றவை நலம் தரும் நவக்கிரகத் தலங்களுள் சிறப்புடைய தாகும்.

சென்னை நகரில் சிவனார் தலங்களில் தனிச் சந்நிதிகளில் விளங்கும் இக்கோயில்களின் அமைவிடம், கோயில் எழுந்த சூழல், கோயில் கட்டப்பட்ட காலம், நவக்கிரகங்கள் தரும் பலன், செவிவழிச் செய்திகள், கள ஆய்வு வழியே கண்டறியப்பட்ட தகவல்களும் இவ்வியலில் விரித்துரைக்கப் படுகின்றன.

# I. சூரியன்

இறைவன்: வாகீச மகாதேவர்.

கோயில் அமைந்த ஊர்: கொளப்பாக்கம்

இறைவி : ஆனந்தவல்லி.

நவக்கிரகத்தலம் : அகத்திய முனிவர்

கோயில் எழுந்தகாலம் : 1300 ஆண்டுகளுக்கு முற்பட்டது.[6]

தனிச்சந்நிதிகள் :

1. சூரியன்
2. ராஜகணபதி **தீர்த்தம் :** அமிர்த புஷ்கர்ணி
3. சுப்பிரமணியர்

## கோயில் அமைவிடம்

சென்னை போரூர் குன்றத்தூர் செல்லும் வழியில் மௌலிவாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து தெற்கே சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. தியாகராயநகரிலிருந்தும், பாரிமுனையிலிருந்தும் பேருந்துகளில் செல்லும் வசதியுள்ளது.

கோயில்திறப்பு: காலை 7.30 மணிமுதல் 9.00 மணிவரையிலும், பிற்பகலில் 5.30 மணி முதல் மாலை 7.30 மணிவரையிலும் கோயிலில் சென்று வழிபடலாம்.

**காலம்:** கி.பி. 878–ல் ஆதித்யன் என்ற அரசன் இக்கோயிலைப் புதுப்பித்துள்ளான், முதலாம் இராஜராஜசோழன், இரண்டாம் ராஜராஜ சோழன், மூன்றாம் குலோத்துங்க சோழன், சுந்தரபாண்டியன், வீரராஜேந்திர சோழன், தெலுங்கு சோழ மன்னன்.

விசயகாந்த் கோபாலன் ஆகியோர் இக்கோயிலுக்கு மானியங்கள் அளித்துள்ளனர். ஸ்ரீ விஜய மகாராஜர் (சுமத்திராதீவு) இக்கோயிலுக்கு 250 குழி நிலத்தை வழங்கியுள்ளான், இங்குக் குறிப்பிடவேண்டிய செய்தி ஒன்றும் உள்ளது. ஸ்ரீ விஜய மகாராஜர் ஒரு புத்த சமய மன்னர் என்பதும் புத்தரதுசிலைகள் இக்கோயிலைச் சுற்றிக்கண்டுபிடிக்கப்பட்ட தன் மூலமும் அறிய முடிகின்றது.[7]

ஸ்ரீ விஜய மகாராஜா இக்கோயிலுக்கு அநேகக் கொடைகளை வழங்கியமையும் நூல் வழியே அறியப்படும் செய்தியாகும். சூரியன் மும்மூர்த்திகளின் அம்சங்களாகத் தோன்றி காசிபமுனிவர்க்குப் பிறந்தார் என்றும், சூரியனுக்கு உஷா, சாயாதேவி என்ற இருமனைவியர் என்றும் கூறப்படுகிறது.[8]

## தலவரலாறு

முன்பொரு காலத்தே இமயமலையில் முனிவர்கள் பலர் தவமியற்றினர். அம்முனிவர்கள் காமம், குரோதம், லோபம், மதம், மோகம், மாச்சர்யம் எனப்படும் ஆறு குற்றங்களும் நீங்கியவர்கள். ஐம்புலன்களையும் புறத்தே செல்லாதபடி தடுத்தவர்கள். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு மறதிக் காரணங்களிலும் மேம்பட்டவர்கள். கண்களின் பார்வை இரண்டையும் ஒருமுகப்படுத்தி மூக்கின் முனையில் நிறுத்திடும் சீலர்கள். மும்மூர்த்தியையும் வழிபட்டவர்கள்.

நான்குவேதம், ஆறுசாத்திரங்கள், பதினெட்டுப் புராணங்கள், இருபத்தெட்டு ஆகமங்கள், அறுபத்தி நான்கு கலைகள், தொண்ணூற்றாறு தத்துவங்கள் முதலியவற்றை ஆராய்ந்த தவசீலர்கள். இப்படிப்பட்ட சிறப்புகள் பலவற்றைக் கொண்ட தவமுனிவர்களில் ஒருவராகக் காலவ முனிவர் என்று ஒருவர் இருந்தார். அவர் முக்காலங்களையும் அறிந்த திறன் பெற்றவர்.

அதனால் அவரிடம் வந்து முக்காலத்தையும் பற்றி விசாரித்து அறிவதுண்டு. ஒருநாள் இனந்துறவி இருவர் காலவமுனிவரிடம் வந்தார்கள். அவர்கள் காலவ முனிவரிடம் தன்னுடைய வருங்காலம் பற்றி வினவினார்கள்.

காவ முனிவர் வருங்காலம் பற்றி ஒன்று மில்லை என்றார், உடனே அந்த இளந்துறவி உங்கள் வருங்காலம் பற்றி நீங்கள் அறிந்ததுண்டா என்று கேட்டனர். அதற்குக் காலவ முனிவர், இதுவரை என்னிடம் இதுபோன்ற கேள்வியை ஒருவரும் கேட்கவில்லையே, நீயாரப்பா என்று வினவினார். அதற்கு இளந்துறவி நான்காலதேவன் என்று பதிலுரைத்தார்.

பின்னர், காலதேவர் சிந்தித்துத் தன்னுடைய வருங்காலத்தை ஆராய்ந்த நிலையில் தனக்குத் தொழுநோய் வர இருப்பதை அறிந்தார், அதனால் வேதனை அடைந்தார். வேதனையடைந்த காலமுனிவரிடம் நவக்கிரகங்களை நினைத்து வழிபட்டால் இத்துன்ப நிலையிலிருந்து விடுபட முடியும் என்றுரைத்த நிலையில் காலவதேவரின் தவத்தால் தொழுநோய் ஏற்படுவது தடுக்கப்பட்டது, நவக்கிரகங்கள் தொழுநோய் ஏற்படுவதைத் தடுத்தன.

இதனையறிந்த பிரம்மன் நவக்கிரகங்களை நோக்கி, நீங்கள் தேவர்களாய் இருந்தாலும் என் கட்டளைப்படியே நடக்க வேண்டியவர்கள் என்றார். காலவ தேவர் தொழுநோய் நீங்கியமையால் அதற்குப்பதில் நவக்கிரகங்களாகிய நீங்கள் தொழு நோயால் அவதிப்படவேண்டு மென்று உரைத்த நிலையில் நவக்கிரகங்கள் மன்னிப்புக் கேட்டன.

பிரம்மதேவர் மனமிறங்கனார். கார்த்திகை முதல் நாள் தொடங்கி எழுபத்தெட்டு நாட்கள் தவம் புரிந்து திங்கள்கிழமைகள் தோறும் உதயத்திற்கு முன் நீராடி பிராண நாதரையும், மங்கள நாயகியையும் வழிபட்டு உதயாதி ஏழு நாளிகைக்குள் வெள்ளெருக்கு இலையில் ஒருபிடி அளவு தயிர்

அன்னம் வைத்துச் சார்ப்பிட வேண்டும் மற்றநாட்களில் உணவருந்தக் கூடாது என்று உத்தரவிட்டார்.

நவக்கிரகங்கள் அகத்தியரைச் சந்தித்து பிரம்மன் வெள்ளெருக்கு இலையில் தயிரன்னம் சாப்பிடுமாறு கூறியதற்கான காரணத்தை வேண்டினர். எருக்கன் இலையில் தயிரன்னம் புசிப்பதால் அந்த இலையில் உள்ள சாராம்சம் அணு அளவு உடலில் சேர்வதால் தொழுநோய் நீங்கும். இது தேவரகசியம் என்றார்.[9] அதன்படி நோயானது நீங்கியது என்பது இத்தலம் பற்றிய வரலாறாகும்.

## சூரிய வழிபாடு

உலகம் இயங்குவதற்குக் காரணமாக அமைந்தது சூரியன். அனைத்து உயிர்களும் சூரிய ஒளியிலேயே உயிர் வாழ்கின்றன. ஞாயிறு, திங்கள், மழை மூன்றையும் கடவுள் வாழ்த்தாகவும் இளங்கோ வாழ்த்துகிறார்.[10] திருமுருகாற்றுப்படை எழுதிய நக்கீரரும் சிறப்பிக்கின்றார்.[11] சூரிய வழிபாடு பண்டைத் தமிழகத்தில் சூரிய வழிபாடாகக் கொண்டாடப்படுகிறது[12] என்பதைத் தைத்திங்கள் முதல்நாளும் நினைவூட்டுகிறது. வடநாட்டில் இவ்வழிபாடு மகரசங்கராந்தி என்று அழைக்கப்பட்டு சிறப்பிக்கப்படுகிறது.

ஐரோப்பா, தென் அமெரிக்கா, சீனா, எகிப்து நாடுகளில் மத வழிபாட்டில் கௌரம் எனப்படும் வழிபாடு சூரிய வழிபாடாக உள்ளது. சில நாடுகளில் அறுவடைத் திருநாளாகவும் கொண்டாடப்படுகிறது.

## சூரியனின் பிறபெயர்கள்

சூரியன், ஞாயிறு, சவிதா, பகன் பூஷா, விஷ்ணு, கேசி, கைசுவாறரன், விருஷாகவி, பகலவன், பக்தி திவாகரன், வாசுரம் என்ற பெயர்களையும் பெற்றுள்ளது.[13]

## தனிச்சிறப்புகள்

வால்மீகி இராமாயணத்தில் இராவணனுடன் இராமன் போர் செய்த போது சோர்வடையாமல் இருக்க அகத்தியர் ஆதித்ய இருதயத்தைக் கூறியதாகக் கூறப்படுகிறது. இராமன் பிறந்த குலம் சூரியகுலம் என்ற வழங்கும் வழக்கமும் உள்ளது, சூரியனை நாள்தோறும் வழிபாடு நிகழ்த்தினால் கண்களின் ஒளிவளரும் என்ற நம்பிக்கை உள்ளது. பெரும்பாலும் சூரியவணக்கம் செய்யும் வழக்கமும் உள்ளது. அதிகாலையில் சூரிய ஒளிபடும்படி நடைப்பயிற்சி செய்யப்படுவதும் நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்ததே.

சூரியனுக்கான புகழ் பெற்ற கோயில்கள் கொனார்க்கிலும் காஷ்மீரில் மார்க்காண்ட் என்ற இடத்திலும், ஆந்திராவில் ஆரவல்லி என்ற இடத்திலும் தமிழகத்தில் குடந்தை அருகே ஆடுதுறையில் உள்ள சூரியனார் கோயிலும் அமைந்து தனிச்சிறப்புடையனவாகத் திகழ்கின்றன.

## ஆலய அமைப்பு

பல்வேறு வேந்தர்களால் இக்கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. இன்றியமையாத தெய்வங்கள் கிழக்கு நோக்கி சூரியனை நேரில் நோக்குவதுபோன்று ஆதவனின் சன்னிதி மேற்கு முகமாக அமைக்கப்பட்டுள்ளது, கதிரவன் சன்னிதி முகப்பின் மேல் சூரியன் ஏழு குதிரைகள் பூட்டிய சூரிய ரதம் சுதை வண்ணத்தில் உள்ளது.[14]

## தலப்பெருமை

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் சூரியன் சந்நிதியில் உடல்நலம் வேண்டி வழிபாடுவோர் கூட்டம் மிகுதியாக உள்ளது, ஞாயிறு

மாலையில் 4.30 முதல் 6.00 மணி வரை இராகுகால பூசையில் கூடுவோர் மிகுதியாக உள்ளனர்.

### சோதிட நம்பிக்கை

சாதகத்தில் சூரியன் துலாராசியில் இருக்கப்பிறந்தவர்கள் லக்கினத்தில், 6, 8, 12–ல் இருக்கப் பிறந்தவர்கள், சூரியனோடு ராகு, கேது, சுக்கிரன், சனி கூடிய நிலையில் இருக்கப் பிறந்தவர்கள், சில அபராதம் செய்தவர்கள் ஆகியோர் இங்கு வந்து வேண்டிக் கொண்டால் பலன் கிடைக்கும் என்கிறார் கோயில் குருக்கள்.[15]

## II. சந்திரன்

| | | |
|---|---|---|
| இறைவன் | : | சோமநாதீசுவரர் |
| இறைவி | : | காமாட்சியம்மை |
| நவக்கிரகம் | : | சந்திரன் – தனிச்சன்னதி |
| தலவிருட்சம் | : | சரக் கொன்றை |
| தீர்த்தம் | : | வினை தீர்த்தான் பொய்கை |

### அமைவிடம்

சென்னை, குன்றத்தூரிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது; பேருந்து வசதிகள் உள்ளன.

### ஆலய அமைப்பு

கருவறை வட்டமான ஆவுடையார். புராதனமான கல்வெட்டுகளுடனான விமானத்தின் கீழ் சோமநாதீசுவரர் அருள்புரிகிறார். கர்ப்பக்கிரகத்திற்கு வெளியே சுப்பிரமணியர் அட்சமாலை, கொண்டி தாங்கி, படைப்புத் தொழிலை சில காலம் செய்த சாஸ்தாவாகக் காட்சி தருகிறார்.

சுவாமி சந்நிதியில் பிறைக் கோட்ட தெய்வங்களாக நர்த்தன விநாயகர் சனகாதிமுனிவர், தட்சணாமூர்த்தி, சண்டிகேசுவரர் உள்ளனர். பலிபீடத்தருகே திரும்பியிருக்கும் நந்திதேவரும் அம்பாள் சந்நிதிமுன் தலவிருட்சமும் உள்ளன. காமாட்சியம்மை நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார்.

## சந்திரனின் சன்னதி

சந்திரன் தனி சன்னதியில் உள்ளார். இரண்டு கரங்களிலும் அல்லிமலர்கள் காணப்படுகின்றன.

## வேண்டுதல்கள்

சந்திரனுக்குத்திங்கள் கிழமைகளில் சந்தனக்காப்புச் சாத்துவதாக வேண்டிக்கொண்டால் மனசஞ்சலம் நீங்கும் என்றும் தன்மன சஞ்சலம் நீங்கியதையும் மங்கை நல்லார் என்ற பெண்மணி குறிப்பிடுகிறார்.[16]

இக்கோயிலில் தயிர்ச் சாதம் வழங்குவதாக வேண்டிக் கொண்டால் ஆஸ்துமா குணமாகும் என்கிறது புராணம்.[17]

## சோதிட நம்பிக்கை

தசா இருப்பும், கிரகங்களின் பெயர்ச்சியும் சந்திரன் இருக்கும் இடத்திலிருந்தே கணக்கிடப்படுகிறது. கடல் கடந்த பயணத்துக்கும் தாயின் ஆயுள் ஆரோக்கியத்திற்கும் கலைரசனைக்கும் சந்திரனே காரணமாவான்.

இறைவனின் விழிகளில் இடது கண்ணாக விளங்குவர் சந்திரன் சந்திரபலம் கொண்டவர்க்கு நிம்மதியாகத் தூக்கம் வரும்.

### சந்திரனுக்கு வழங்கும் பெயர்கள்

இந்து, அம்புலி, குமுத சகாயன், நிலா, மதி பிடித்தமலர், வெள்ளார், அல்லிப்பூ.

### புராணச் செய்தி

சந்திரனின் பிறப்புப் பற்றிய சிலபுராணங்கள் விஷ்ணுவின் மார்பில் உதித்தவன் என்கின்றது.[18] சந்திரன் சாபம் நீங்கப்பெற்று சிவனுடைய தலையின் சூடப் பெற்றான் என்றும் குறிக்கப்படுகிறான்.

# III. அங்காரகன் (செவ்வாய்)

சென்னை, பூவிருந்தவல்லி என்னும் பூந்தமல்லில் ஸ்ரீபூவைத்தீசுவரர் மூலவர் கோயில் கொண்ட நவக்கிரகத் திருத்தலம் அங்காரகன் (செவ்வாய்) திருத்தலம். இத்தலம் பரிகாரத்தலமாகவும் விளங்குகின்றது.

### அமைவிடம்

சென்னை பூவிருந்தவல்லி பேருந்து நிலையத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. போரூர் – பூந்தமல்லி மார்க்கத்தில் பூவிந்தவல்லி பேருந்து நிலையத்திற்குச் சுற்று முன்பாக இடது பக்கம் உள்ளது.

### ஆலய அமைப்பு

வடக்கு நோக்கிய நிலையில் மூன்று நிலைகளைக் கொண்டதாய் ஐந்து கோபுரக் கலசங்கலோடு ஆலயம் திகழ்கிறது. கிழக்கு முகமாகவும் ஒருவாசல் உள்ளது. அதற்கும் சிறு கோபுரம் உள்ளது. கிழக்கு வாயில் முன்பாக தெப்பக்குளமும் உள்ளது.

கோயில் உட்புறத்தே கொடி மரத்துடன் பலிபீடமும் உள்ளது. கருவறையில் மூன்று தளவிமானத்தின் கீழே வைத்தீஸ்வர லிங்கம் உள்ளது.

கருவறைமுன் வலப் பக்கம் விநாயகரும், இடப்பக்கம் தாழிப்பானையின் சிலாரூபமும், சிறிய லிங்கமும் காணப்படுகிறது சன்னதியில் மேல்பக்கத்தே ஆட்டுக் கடா வாகனத்துடன் அங்காரகன் இருக்கும் சுதைச் சிற்பமும் உள்ளது.[19]

இத்தலத்தில் ஆதிசங்கரர் 3 சக்கரங்களைப் பிரதிட்டை செய்துள்ளார். அவை, ஸ்ரீ சக்கரம், சுப்பிரமணி சக்கரம், விண்முக சக்கரம்.[20]

## தனிச்சிறப்புகள்

கோயிலின் இராஜகோபுரம் வடக்கு நோக்கி உள்ளது. ஆயினும் கோயில் கிழக்குப் பார்த்து அமைந்துள்ளது. கோயில்வாயிலில் இருபுறங்களிலும் அழகிய சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன.

மாசிமாதம் 21, 22, 23, 24, 25 ஆகிய நாட்களில் காலை ஆறு மணிக்குச் சூரியனின் கிரணங்கள் சுவாமியின் மீது விழும் வகையில் கோயில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சுவாமியைச் சூரியன் வழிபாடு செய்வதாகவும் வழிபடுவோர் கருதுகின்றனர்.

இக்கோயில் தலவிருட்சமாக உள்ளது தாழிப்பனையாகும்.

## தலவரலாறு

ஒருசமயம் இந்திரன் குட்ட சோகத்தில் அவதியுற்றான், நோயுற்றவன் ஆட்சி பீடத்தில் அமர முடியாது. இந்திரன் நவக்கிரக நாயகர்களிடம் வந்து யாராவது இடம் மாறமுடியுமா என்று கேட்டான் செவ்வாயாகிய அங்காரகன் இந்திரனின் வேண்டு கோளைஏற்று இடம்

பெயர்ந்தான், இதையறிந்த பரமன் அங்காரகனைச் சினந்து, காலவிதியை மாற்றி நடந்தமையால் இந்திரன் அடைந்த குட்ட ரோகத்தை நீ அனுபவிப்பாய் எனச் சபித்தார். சிவனாரை வணங்கிய அங்காரகன் சாப விமோசனம் தந்தருளுமாறு வேண்டினான். அதற்குச் சிவனார் பூலோகம் சென்று லிங்க ஆராதனை நடத்துமாறு கட்டளையிட்டான்.

அங்காரகன் மண்ணுலகை அடைந்து இத்தலத்தில் பனைமரம் ஒன்றின் கீழ் சிவலிங்கம் உருவாக்கிச் சிவபூசனைகள் நிகழ்த்தினான். உரியகால அளவில் இறையருளால் அங்காரகனின் குட்டரோகம் விலகியது. பிறகு அங்காரகன் இறைவனிடம் இத்தலம் வந்து தொழுவோர் பிரச்சினைகளையும் வியாதிகளையும் நீக்குமாறு வேண்டினான். இறைவனும் அவ்வாறே செய்வதாக வாக்களித்தார்.[21]

**அங்காரகனின் பிறபெயர்கள்**

செவ்வாய், குஜன், மங்களான், வெளமனி, பூமிபுத்திரன் என்பன.

| | | |
|---|---|---|
| இறைவன் | : | ஸ்ரீவைத்தீஸ்வரன் |
| அம்பிகை | : | தையல் நாயகி |
| தலவிருட்சம் | : | தாளிப்பனை மரம் |

## IV. கோஹூர் - சௌந்தரேசுவரர் (புதன் திருத்தலம்)

இக்கோயில் ஏழாம் நூற்றாண்டளவில் கட்டப்பட்டுள்ளது என்று கருதப்படுகிறது.[22]

| | | |
|---|---|---|
| இறைவன் | : | சுந்தரேசுவர் (திருமன்னீசுவரர்) |
| இறைவி | : | திருவுடை நாயகி (சுந்தராம்பிகை) |

## வரலாறு

சிவபெருமானைத் திருமணம் செய்து கொள்வதற்காக காமாட்சியம்மை மாங்காட்டில் பஞ்சாக்கினி நடுவில் நின்று ஒன்றைக் காலில் தவம் செய்து கொண்டிருந்தார். இவரது தவவலிமை உலக மெங்கும் வெப்பமாய்த் தகித்தது. சிவபெருமான் அப்போது கண்ணை மூடித் தவத்தில் இருந்தார். முனிவர்களும் தேவர்களும் செய்வதறியாது மகாவிஷ்ணுவிடம் சென்று முறையிட்டனர். மகாலட்சுமி பசுவடிவில் வந்து சிவபெருமானை வழிபட்டார். சிவபெருமான் தியானத்திலிருந்து கண்திறந்தார் சிவபெருமான் கண்திறந்தமையால் உலகமெங்கும் குளிர்ச்சியானது. மகாலட்சுமி பசுவின் வடிவில் வந்து வழிபட்டமையால் கோபுரி என்றழைக்கப்பட்டு பின்னர் நாளடைவில் கோவூர் என்றழைக்கப்பட்டது.[23]

## தலப்பெருமைகள்

தியாகேசர், நான் இராமனைத்தவிர எந்த ஒரு தனிப்பட்ட கடவுள் மீதும் பாடமாட்டேன் என்று மறுத்துவிட்ட நிலையில் கோவூரைக் கடந்து அவர் செல்கையில் திருடர் கூட்டமொன்று அவரைச் சூழ்ந்து கொண்டது. அவர் மீது கல் விழுந்த நிலையில், தியாகராசன் தன் மீது விழுந்த கல்லை மீண்டும் அவர்கள் மீது கல் விழும்படி இறைவனை வேண்டினார். அதுபோலவே கல் அத்திருடர்கள் மேல் விழுந்தது. திருடர்கள் தியகராசனிடம் சரணடைந்தனர். அவர்களில் இருவர் தாம் எறிந்த கற்களை மீண்டும் அவர் மீது எரிந்தனர்.

தியாகராசர் தன் தவ வலிமையால் அவர்கள் இருவரும் இராமனும் இலக்குவனும் என்று அறிந்து கொண்டார். இவ்வூரில் ஏதோ மகிமை உள்ளது என்று தியாகராசர் உணர்ந்து கொண்டார். கோவூரில் தங்கிச் சிவபெருமான் மீது ஐந்து கீர்த்தனைகள் பாடினார் தியாகேசர். இவ்வூரில் தான்

பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பெருமான் பிறந்தார் என்பது இவ்வூருக்கான சிறப்பாகும்.

### ஆலய அமைப்பு

இக்கோயில் ஏழுநிலை இராஜகோபுரமாக அமைந்து ஒன்பது கலசங்களுடன் ஒங்கி நிற்கின்றது. வெளிப்பிரகார அளவில் நேத்திர கணபதி, வர சித்தி விநாயகர், சனீசுவரன் சந்நிதிகளும், நவக்கிரகக் கன்னிகளையும் காணமுடிகிறது.[24] வீரபத்திரர், ஸ்ரீ வள்ளிதேவசேனா சமேத சுப்பிரமணியசுவாமி, நவக்கிரகங்கள், அறுபத்து மூன்று நாயன்மார்கள் உள்ளனர். இறைவி சௌந்தராம்பிகை சன்னதி தெற்கு நோக்கியும் அமைந்துள்ளது.

### தீர்த்தங்கள்

(1) சிவகங்கைத் தீர்த்தம்

(2) ஐராவதத் தீர்த்தம்

தலவிருட்சம் வில்வம், இங்குள்ள வில்வ மரத்தைப் போன்று மற்ற இடங்களில் காண்பது அரிது. இந்த வில்வம் மருத்துவ குணமுடையது என்கின்ற தகவலும் வழிபாடு செய்த ஒருவர் வாயிலாக அறிய முடிந்தது.

## V. போரூர் இராமநாதேச்சுவரர் (குரு)

### அமைவிடம்

சென்னை, போரூரிலிருந்து குன்றத்தூர் போகும் பேருந்து வழித்தடத்தில் போரூர் பவர் அவுஸ் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் அரைகிலோ மீட்டர் தொலைவில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. குரு பரிகாரத் தலங்களுள் ஒன்று.

இராமர் இலங்கைக்குச் செல்லும் வழியில் இத்தலத்தில் இளைப்பாறிச் சென்றார். அப்போது இது வனமாக இருந்தது. அங்கிருந்த நெல்லிக்கனி காய்க்கும் மரத்தடியில் நின்றபோது அங்குச் சிவலிங்கம் இருப்பது தெரியாமல் அதன்மீது கால்பட்டதால் மிகவும் வருந்தினார். அதற்குப் பரிகாரமாக ஒரு நெல்லிக்கனியை மட்டுமே உண்டு நாற்பத்தெட்டு நாட்கள் விரதம் இருக்கப் போவதாகக் கூறினார். இராமன் அந்தச் சிவலிங்கத்தை இலக்குவனின் உதவியுடன் வெளிக்கொணர்ந்தார், சிவபெருமான் அப்போதே இராமருக்கு விசுவரூபம் தந்தார். இராமர் பூசித்த இலிங்கமாதலால் ராமநாதீசுவரர் என்று இங்குள்ள இலிங்கத்திற்குப் பெயர் உண்டாயிற்று.

இராமர் சிவபெருமானையே தன் குருவாக எண்ணிச் சீதை இருக்குமிடத்தை எவ்வாறு சென்றடைவது என்று கேட்டார், சிவபெருமான் அதற்கான வழிமுறைகளையும் கூறினார்.

இராமனும் சிவனைத்தன் குருவாக ஏற்றுக் கொண்டு வழிபட்டதலமானதால் குருவாக சிவபெருமான் இத்தலத்தில் இருக்கின்றார். இந்த இடத்திற்கு வடக்கு இராமேஸ்வரம் என்ற பெயரும் உள்ளது.[25]

சண்முகப் பெருமான் சூரியனை வதம் செய்யப் புறப்பட்டபோது இங்குவந்து சிவபெருமானை ஆராதித்து போருக்கு வாழ்த்துப் பெற்ற ஊர் போரூர் ஆயிற்று, ஸ்ரீராமன் பஞ்சாட்சரம் ஓதுவித்த இடமானதால் நீரோடு தீர்த்தமும், திருகியும் கொடுக்கப்படுகிறது. சீதை மீண்டும் அயோத்தி திரும்பிய நிலையில் இங்குவந்து சிவலிங்க பூசை செய்வதாகவும் கூறப்படுகிறது.[26]

## ஆலய அமைப்பு

கருவறை முன்மண்டல முகப்பில் சுதை சிற்பங்கள் காணப் படுகின்றன. ஜோதீர்லிங்கங்கள், மகாவிஷ்ணுவின் அவதாரங்கள், போன்றவை காணப்படுகின்றன.[27]

கோட்டப் பிறைகளில் விக்னேசுவரர், சுப்பிரமணியர், மகாவிஷ்ணு, பிரம்மா, துர்க்கை உள்ளனர்.

இக்கோயிலின் தலவிருட்சம் வேம்பும் நெல்லியும் ஆகும். இங்கு ஈசன் வடிவில் தட்சிணாமூர்த்திக்கான அர்ச்சனை ஆராதனைகளும் மூலத்தானத்திலேயே செய்யப்படுகின்றன. பக்தர்கள் வியாழக்கிழமைகளில் கடலை, சுண்டல் நிவேதனம் செய்கின்றனர். திராட்சைமாலை, கடலை மாலை சாத்துகின்றனர். சோம வாரங்களில் தயிர்ச் சாதம் நிவேதிப்பதாக வேண்டிக் கொண்டால் நினைத்த காரியம் கைகூடும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாகவும் உள்ளது.

இறைவன் : ஸ்ரீ ராமநாதேசுவரர்

அம்பிகை : ஸ்ரீ சிவகாம சுந்தரி

# VI. மாங்காடு - வெள்ளீசுவரர் (சுக்கிரன்)

சென்னையில் மாங்காடு என்னுமிடத்தில் இத்தலம் அமைந்துள்ளது, அருள்மிகு காமாட்சியம்மன் ஆலயத்துக்கு அருகிலேயே இக்கோயில் அமைந்துள்ளது.

இறைவன் : ஸ்ரீ வெள்ளீசுவரர் (பார்க்கவேசுவரர்)

அம்பிகை : ஸ்ரீ காமாட்சியம்மை

## ஆலய அமைப்பு

சுக்ராச்சாரியார் சிவதரிசனம் பெற்ற தலம். இக்கோயில் முகப்பில் சுதைச் சிற்பங்கள் காணப்படுகின்றன. கோயில் உள்கட்டமைப்பில் நந்தவனம், நந்திதேவர், கருவறையில் சுக்ரருக்கு அருளிய வெள்ளீசுவரர், நாகபூஷணம், வெள்ளி விபூதியுடன் உள்ளார்.

கர்ப்பக்கிருக வாயிலின் இருபுறமும் விநாயகரும், சுப்பிரமணியரும் உள்ளனர். கணபதி நெற்கதிரையும், மாங்கனியையும் ஏந்தியிருக்கிறார், உழவர்களின் உழுபயன்கள் பெருக இவரை மக்கள் நம்பிக்கையோடு வேண்டுவதாகக் குறிப்பிபிடுகின்றனர்.

ஒரே கல்லில் வடிக்கப்பட்ட வள்ளி, தெய்வானை சமேத முருகப் பெருமான், நந்திதேவியின் முன் பீடம் போன்ற அமைப்பு மையக் கல்லில் காமாட்சியம்மை நின்ற நிலையிலும் அம்பாள் சன்னிதி உள்ளது.

கோயிலில் அமைந்துள்ள பிறைக் கேட்டங்களில் தட்சிணாமூர்த்தி லிங்கோத்பவர், திசைமுகன், ஆதிதுர்க்கை ஆகியோர் உள்ளனர். பிரகாரங்களில் சன்னதிகளும் காணப்படுகின்றன.[29]

## புராணக்கதை

கச்சியப்பரின் புதல்வனாய் அவதரித்தார் வாமனார். பிறந்து வேகமாக வளர்ந்த நிலையில் சிறப்பாக உபநயனமும் நடைபெற்றது. தாழங்குடை பிடித்து கமண்டலத்துடன் மகாபலியின் யாகசாலையை வந்தடைந்து மூன்றடி நிலம் தானமாகக் கேட்டார். மகாபலி ஒரு ஊரையே தாரை வார்த்துத் தருவதாகக் கூறிய நிலையில் அதனை அவர் ஏற்கவில்லை, அப்போதுதான் அசுரகுருவான சுக்ராச்சாரியருக்கு ஐயம் ஏற்பட்டது.

இவன் குள்ளனன்று கள்வன். இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது – என்று மகாபலியைத் தனியே அழைத்து காதில் குறிப்பிட்டார் சுக்கிரர். மகாபலியோ வாக்களித்த நிலையில் அதனை மாற்ற விரும்பவில்லை, ஒருசிறு குள்ள உருவம் மாறி சத்யவளி (மகாபலியின் மனைவி) பிடித்திருக்கும் கெண்டியின் நீர்வரும் துவாரத்தை அடைத்துக் கொண்டார் சுக்கிரர். மகாபலி மந்திரங்களை உச்சரித்து நீர்வார்க்கும் சமயம் நீர்வரும் துவாரத்தை அடைத்துக் கொண்டார். பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வருமாறு கட்டளையிட்டான் மகாபலிச்சக்கரவர்த்தி.

வாமனார் தேவையில்லை என்றரைத்து தரையில் கிடந்த ஒரு தர்ப்பையை எடுத்து கெண்டியின் துவரரத்தைக் குத்திய நிலையில் தண்ணீரும் உதிரமும் சேர்ந்து வந்தது. கீழே ஒரு கண் இழந்த நிலையில் சுக்கதுண்டும் கீழே விழுந்தது. மூன்றடி மண்கேட்டு திரிவிக்கிரமனாய் வளர்ந்து இரண்டு அடிகளால் விண்ணையும் மண்ணையும் அளந்த நிலையில் மூன்றாம் அடிக்கு இடம் கேட்க மாவலிதன் சிரசைக் காட்ட அவன் தலையில் கால்வைத்து அழுத்தி பாதாள உலகத்திற்கு அனுப்பினார்.

தானத்தைத் தடுத்த பாவமானது தீர, ஈசனைக் குறித்து மாங்காட்டில் தவம் புரிந்தார் சுக்கிரர், அதே வனப்பகுதியில் உமையும் தவமிருந்தார். இடபவாகனத்தில் காட்சி தந்து உமையம்மையை காசிக்கு அனுப்பிய நிலையில் சுக்கிரனுக்கு அருள்புரிந்தார். என் அம்பமும் உங்களோடு இங்கே இணைந்திருக்க வேண்டும். என் பெயரால் தாங்கள் விளங்கவேண்டும் என சுக்கிரன் வேண்ட அப்படியே சிவனும் வெள்ளீசரானார்.

சுக்கிரனின் பிற பெயர்கள்: வெள்ளி, பார்க்கவர், சுக்கலவூஷணன், கலியன், கலி. இங்குள்ள காமாட்சியம்மன், வெள்ளீசுவரர், வைகுண்டபெருமான் ஆகிய திருக்கோயில்கள் ஒன்றுடன் ஒன்று வரலாற்றுத் தொடர்பு கொண்டவையாக உள்ளன.

### பெயர்க் காரணம்

முன் காலத்தில் இப்பகுதி மாமரங்கள் நிறைந்து விளங்கியமையால் இவ்வூர் மாங்காடு என்ற பெயரையும் பெற்றது.[31]

### இன்றியமையாத தகவல்கள்

வாழ்க்கைத் துணைக்கு சாதகத்தில் சுக்கிரனின் நிலையே முக்கிய காரணமாகும் துலாம், ரிஷபம் இன்பம் இவரது சொந்தவீடு, மீனம் இவரது உச்சஸ்தானம் இவரது உலோகம் வெள்ளி, புதனும் சனியும் இவருடைய நண்பர்கள்.

பிறந்த சாதகத்தில் இவர் **3, 6, 8, 12**ல் மறையாதிருந்தால் ஆஸ்வழிய யோகம் சித்திக்கும். பெருந்தன்மை, அதிர்ஷ்டம், கௌரவம் இவைகளை இவர் வாரி வழங்குவார். ஆபரணங்கள், இசை, நடனம், நாடகம், திரைப்படம் போன்ற கலைத் துறைகளில் புகழ், அழகு, காதல் அனைத்தையும் அளிப்பார்.

## VII. பொழிச்சலூர் ஸ்ரீ அகத்தீசுவரர் (சனி)

சென்னை பல்லாவரத்திலிருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவில் சனி பகவான் கோயில் உள்ளது. பொழிச்சலூர் சிவன் கோயில் என்று கேட்டாலே பேருந்து நடத்துநர் வழி காட்டிப் பேருந்து நிறுத்தி இறங்கச் செய்வார்.

| | | |
|---|---|---|
| இறைவன் | : | அகத்தீஸ்வரர் |
| அம்பிகை | : | ஸ்ரீ ஆனந்தவல்லி |
| தீர்த்தம் | : | நள்ளாறு தீர்த்தம் |

## பெயர்க்காரணம்

சோலைகள் நிறைந்திருந்தமையால் பொழில் சேர் எனப் பெயர் சூட்டினான் புகழ்ச் சோழன், அதுவே நாளடைவில் பொழில் சோழ நல்லூர் ஆகிப்பின்னர் பொழிச்சலூரானது. அகத்தியர் ஆராதித்தமையால் அகத்தீஸ்வரர் என்று சுவாமிக்குப் பெயர் ஏற்பட்டது.

## காலம்

இக்கோயில் சோழர் காலத்துக்கலைப் பாணியைக் கொண்டுள்ளது. சோழர் காலத்துக் கோயில்கள் என்றாலே கஜபிருஷ்டம் என்ற முறையிலேயே கட்டப்பட்டிருக்கும்.

## தீர்த்தம்

சனி தீர்த்தம்

## ஆலய அமைப்பு

கிழக்கு நோக்கிய சன்னதி, சனிபகவான் இங்கு வீற்றிருப்பதால் பரிகாரத்தலமாகவும் விளங்குகின்றது.

இராஜகோபுரம், கொடி மரம், பலிபீடம், நந்தி மண்டபம், பிறைக் கோட்டத்தில் தெய்வங்கள், விநாயகர், சுப்பிரமணியர், ஆஞ்சநேயர் மற்றும் நவக்கிரக ஆலயம் அனைத்தும் ஒருங்கே அமைந்து ஆலயமாகத் திகழ்கிறது.

அகத்தியர் நீண்டகாலம் வழிபட்ட தலமாக உள்ளது. இங்குள்ள இலிங்கம். இது சுயம்புவானது, அகத்தியருக்குத் திருமணக்கோலத்தை சிவபெருமான் இத்திருத்தலத்திலேயே காட்சியளித்தார். இத்தலத்தில் வழிபடுவோர் சனி பகவனால் ஏற்படும் அனைத்து இன்னல்களும் விலகும்.

இத்தலத்தை வட திருநள்ளாறு என்றழைக்கின்றனர். இராகு, கேது, பரிகாரத்தலமாகவும் விளங்குகின்ற சிறப்புடைய தலமாகும்.

## புராணச் செய்தி

சிவபெருமான் வகுத்த நியதிப்படி ஒவ்வொருவரையும் பிடித்த சனி ஒருசமயம் ஈசனையே பிடிக்கப்புறப்பட்டார். ஈசுவரனோ தாமரைக் குளத்தில் ஒளிந்த நிலையில் சனி பகவானுக்குக் கர்வம் தணியவில்லை. தனக்கு வரம் தந்த ஈசனே தம்மைக் கண்டு நடுங்குவது கண்டு தானே ஈசுவரனுக்கு மேலானவன் என நினைத்தான்.

இதனை அறிந்த கங்காதரர் இனி உன்னால் பிடிக்கப்படுபவர்களின் துன்பமானது உன்னைப் பற்றட்டும் என்று சபித்தார். சாபச் சுமையால் சனிபகவானால் நகரவும் முடியவில்லை. சர்பேசரைத் தியானித்து தன் குற்றத்தை மன்னிக்குமாறு வேண்டினான்.

ஈசன் தோன்றி தென் பொதிகையோடும் மார்க்கத்தில் அகத்தில் வழிபட்ட லிங்கம் உள்ளது, அதனை ஆராதித்து வந்தால் உன்னிடமுள்ள அகம்பாவ மூட்டை விலகும் என்றருளினார். இந்த வனத்தில் வந்து இலிங்கத்தைத் தேடிக்கண்டு பிடித்து ஆராதனை செய்தார் சனிபவான்.

சனீசுவரரின் சுமையானது உரிய காலத்தே இறங்கியது[32] சனீசுவரனுக்குச் சிவபெருமான் ஈசுவர பட்டம் வழங்கினார். இத்தலம் சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தலமாகும்.[33]

## சனிபகவானின் பிற பெயர்கள்

ஸ்ருதசர்மா மந்தகன், கலகவாகனன், கதிர்சேர். இவர் யமதர்மனின் சகோதரர் என்றும் குறிப்பிடுவர்.

# VIII. குன்றத்தூர் நாகேசுவரர் - (ராகு தலம்)

## அமைவிடம்

சென்னையிலிருந்து சுமார் இருபத்தைந்து கிலோ மீட்டர் தொலைவில் இத்தலம் உள்ளது. போரூரிலிருந்து பத்துக் கிலோமீட்டர் தூரமும், பல்லாவரம் மார்க்கமாக ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலும் இக்கோயில் அமைந்துள்ளது. குன்றத்தூர் பாரிமுனை வழியே ஏகப்பட்ட பேருந்து மார்க்க வழியிலும் இத்தலத்தை அடையலாம்.

## அமைவிடம்

இத்திருக்கோயில் 800 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட திருக்கோயில் என்று சரித்திர ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இத்திருக்கோயிலை சேக்கிழார் கட்டினார்.

மூன்றாம் குலோத்துங்கசோழன் (கி.பி.1178–1218) மூன்றாம். ராசேந்திரசோழன் (கி.பி.1246–1271) காலத்திய கல்வெட்டுக்கள் இங்குக் கிடைத்துள்ளன. திருவிழாக் காலங்களின் போது நாட்டியமாடிய பிரபலமான இருவர் பெயர்களும் காணப்படுகின்றன.[34] அந்த இருவரில் ஒருவர் சித்திர மேழி நங்கை, மற்றொருவர் திருப்புண்ணாழிகை நங்கை, சேக்கிழாரின் வழிவந்தோர் தற்போது இக்கோயிலின் அறங்காவலர்களாக உள்ளார்கள்.[35]

## சேக்கிழார்

பெரியபுராணம் இயற்றிய சேக்கிழார் கல்வி கேள்வியில் சிறந்து விளங்கியமையால் இரண்டாம் குலோத்துங்கன் என்ற அநபாயச்சோழன் சோழ நாட்டின் முதலமைச்சராக்கினர். தான் முதலமைச்சராக விளங்கிய

காலத்தே குடந்தைக்கு அருகேயுள்ள திருநாகேசுவரன் கோயிலுக்குச் சேக்கிழார் அடிக்கடி செல்வதுண்டு. அக்கோயில் சார்ந்த பகுதிகளில் உள்ள பணிகளை விரைந்து முடித்தார். பணியிலிருந்து ஒய்வுபெற்ற நிலையில் தன் சொந்த ஊரான குன்றத்தூருக்கு வந்து குடந்தை அருகேயுள்ள நாகேஸ்வரம் போன்றதொரு கோயிலை எழுப்பினார். அந்தப் புதிய நாகேஸ்வரத்துக்கு வடநாகேஸ்வரம் எனப் பெயரும் சூட்டினார். நாகத்தின் கீழ் லிங்கவடிவில் காட்சிதரும் சுவாமிக்கு நாகேசுவரர் என்ற பெயரையும் வைத்தார். அக்கோயிலில் திருவிழாக்கள் நடத்த மானியமும் எழுதி வைத்தார்.

## ஆலய அமைப்பு

இராஜகோபுரம் ஐந்து நிலைக் கலசங்களுடன் உடையதாக புதுப் பொலிவுடன் சிற்பங்களையுடைய கேபுரமாகத் திகழ்கிறது.

கிழக்கு முகமான ஆலயம் நுழையும் முன் இடது பக்கத்தே தெப்பக்குளம் அமைந்துள்ளது. தைப்பூசத்திருவிழா நாளில் தொடங்கி மூன்று நாட்கள் தெப்போற்சவம் நடைபெறும். முதல் நாள் சோமாஸ்கந்தர், இரண்டாம் நாள் சந்திர சேகரர் உலா, மூன்றாம்நாளில் தேவியர்களுடன் முருகன் பவனி வருகிறார்.

ஆலயத்தின் உள்பகுதியில் இடப்பக்கத்தே சேக்கிழார் சன்னதி உள்ளது. சேக்கிழாரின் பிறந்த நாளான வைகாசி பூசத்தன்று விழா கொண்டாடப்படுகிறது. கோயில் கருவறை நுழைவாயிலுக்கு எதிரில் கொடிமரம், பலிபீடம், பிரதோஷ நந்தியின் நான்குகால் மண்டபமும் உள்ளது. இடப்புறம் கற்பக விநாயகர், வலப்புறம் கோடி தீப மண்டபமும் உள்ளது.

வள்ளலார் சேக்கிழார் பெருமானைப் போற்றிப் பாராட்டி யுள்ளமையால் அவருடைய வண்ணச்சித்திரத்தின் முன் தீபம் ஏற்றப் படுகிறது. சுதையாலான துவாரபாலகர்கள் உள்ளனர். இடப்புறம் அம்பாள்

சன்னதி. அம்பாள் சன்னதியில் அம்பாள் சன்னதியின் இடப்பக்கம் பள்ளியறையையும், உட்பிரகாரம் வலப்பக்கத்தே உற்சவர், சேக்கிழார், சந்திரன், பரவை நாச்சியாருடன் சுந்தரர், விநாயகர், சத்திய நாராயணர், அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், நாகேந்திரர், நாகநாதேச்சுவரர், காளிங்க நர்த்தன கண்ணன் என வரிசையாக சிலை வடிவங்களையும் காணமுடிகிறது. விநாயகர், தட்சணாமூர்த்தி, திருமால், நான்முகன், விஷ்ணு, துர்க்கை ஆகியோர் பிறைக் கோட்டங்களில் கருவறையின் வெளிப்புறச் சுவர்களில் காட்சியளிக்கின்றனர்.

ஒரு மேடை போன்ற வடிவமைப்புடைய இடத்தில் காசிவிசுவநாதர், அண்ணாமலையார், திருமகள், கலை வாணி, வீரபாகு முதலியானவர்களின் சிலை வடிவங்கள் காணப்படுகின்றன.

ஆலயத்தின் பிரதான லிங்கமான ஸ்ரீ நாகேஸ்வர லிங்கத்தின் தலைப்பகுதியானது சேதமடைந்துள்ளது. இரவு நேரத்தில் பாம்புகள் ஈசனின் திருமேனியில் தவழ்வதாகக் கூறப்படுகிறது.[36]

| | | |
|---|---|---|
| தலவிருட்சம் | : | செண்பகம் |
| தீர்த்தம் | : | சூரிய புஷ்கர்ணி |

## IX. கெருகம்பாக்கம் நீலகண்டேசுவரர் - (கேது திருத்தலம்)

சென்னை பாரிமுனையிலிருந்து இருபது கிலோ மீட்டர் தொலைவில் இத்திருத்தலம் உள்ளது. போரூர் குன்றத்தூர் வழியில் உள்ளது. இக்கோயில் ஒரு புராதன தலமாகும். ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் சிறப்புப்பூசைகள் நடைபெறுகின்றன. பிரதோச விழாவும் இக்கோயிலின் தனிப்பட்ட விழாவாகும். பழமையான தலமாகவும் விளங்கும் சிறப்புடையது.

## காலம்

சோழமன்னர்கள் காலத்துக் கட்டப்பட்ட தலம்.

## ஆலய அமைப்பு

எளிமையான முகப்பு வாயிலைக் கொண்டுள்ளது. உள்ளே நீலகண்டேசுவரர் சன்னதி உள்ளது. ஆதிகாமாட்சி சன்னதியும் உள்ளது. சன்னதியில் நந்தி தேவரும் அவருக்குப் பின்னால் பலிபீடமும் உள்ளது. கிழக்கே உள்ள வாசல் மூடியே உள்ளது.

கருவறையில் இடப்பக்கத்தே கணபதி, தட்சணாமூர்த்தி திருமால், துர்க்கையும் உண்டு.

கருவறையின் வலப்பக்கத்தே சண்டிகேசுவரர் உள்ளார். இதனையடுத்து நவக்கிரக சன்னதி உள்ளது, இக்கோயில் பற்றிய புராணக்கதையும் சொல்லப்படுகின்ற கதையாகவே உள்ளது.

## கேதுவின் வேறு பெயர்கள்

ஞானகாரசண், தூமகேது, போககேது, சர்வகேது, கதிர்ப்பகை, செம்பாம்பு என்பவையாகும்.

## தொகுப்புரை

சென்னையில் அமைந்துள்ள நவக்கிரகக் கோயில்கள் சிவத் தலங்களிலேயே தனியே சந்நிதியில் அமைந்துள்ளது.

ஒவ்வொரு நவக்கிரகக் கோயில்களிலும் காலை வழிபாடும் மாலை வழிபாடும் நடைபெறுகிறது. இவ்வியலில் கூறப்பட்டுள்ள நவக்கிரக்கக் கோயில்கள் பரிகாரத்தலங்களாகவே உள்ளன.

பெரும்பான்மையும் புராணச்செய்திகளும், செவிவழிச்செய்தியும் கோயில்களின் பெருமைகளை எடுத்துரைப்பனவாக உள்ளன.

நவக்கிரக கோயில்களுக்குச் சென்றுவர பேருந்து வசதியும், சாலை வசதிகளும் உள்ளன. ஒருசில நவக்கிரகத்தலங்களில் சிறப்பான விழாக்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு நவக்கிரகக் கோயில்களும் இயற்கையான சூழல்களிலேயே அமைந்துள்ளது.

கோயில்களின் திருப்பணிகளைச் செல்வந்தர்களும், சோழர்கால அளவில் ஆட்சிபுரிந்த மன்னர்களும் திருப்பணிகளையும், மானியங்களையும் வழங்கியுள்ளனர்.

குன்றத்தூர் திருநாகேஸ்வரர் கோயிலில் ஆண்டுதோறும் மூன்று நாட்கள் தெப்ப உற்சவம் நடைபெறுகிறது.

மாங்காடு காமாட்சியம்மனை வழிபடுவோர் அருகிலுள்ள நவக்கிரகக் கோயிலுக்கும் சென்று வருகின்றனர்.

கோயில்களில் காணப்படும் சுதை வடிவங்கள் சிலவும் சிதைந்து உள்ளன. துவார பாலகர்கள் உள்ள கோயில்களில் மண்சுதை வடிவங்களே காணப்படுகின்றன. நந்தி மண்டபம், பலிபீடம் பெரும்பான்மையான நவக்கிரகக் கோயில்களில் உள்ளன. அம்பிகையின் சன்னதி தெற்குப் பார்த்த அளவிலேயே அமைந்துள்ளது. பிரதோஷ வழிபாடு மற்றும் இராகுகால வழிபாட்டில் பெரும்பான்மையான பக்தர்கள் கூட்டத்தைக் காணமுடிகிறது.

# சான்றெண்விளக்கம்

1. இராமநாதன், வே., அதிசய ஆலயங்கள், பக்.80–92.

2. இராமச்சந்திரன், பூ., திருக்குடந்தை சைவக் கோயில்கள் ஓர் ஆய்வு – சென்னைப் பல்கலைக்கழக முனைவர்பட்ட ஆய்வேடு (நூல் அச்சிடப்படவில்லை), ப.120.

3. நேர்காணல்: சென்னை மயிலைக் கபாலீசுவரர் திருக்கோயில், ஆய்வாளர் நேரில் கண்டநாள் 8.7.2015.

4. கிருஷ்ணமூர்த்தி, T.V., நலம்தரும் நவக்கிரகக் கோயில்கள், ப.5.

5. மேலது நூல், ப.6.

6. நேர்காணல் : திரு. சுப்பிரமணியம், சூரியன் கோயில் குருக்கள், நாள்: 9.7.2015.

7. நலம் தரும் நவக்கிரகக் கோயில்கள், ப.77.

8. மேலது, ப.2.

9. மேலது, ப.8.

10. இளங்கோவடிகள், சிலம்பு முன்னுரைப் பகுதி.

11. திருமுருகாற்றுப்படை, ப.8.

12. தட்சிணாமூர்த்தி, அ., பழந்தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.8.

13. நலம் தரும் நவக்கிரகங்கள் கோயில்கள், பக்.34–35.

14. நேர்காணல் : நாள்: 11.07.2015.

15. நேர்காணல் : திரு. சோமசுந்தரம், நாள்: 11.07.2015.

16. நேர்காணல் : மங்கை நல்லாள், நாள்: 11.07.2015.

17. சென்னை சிவத்தலங்கள், ப.38.

18. நலம் தரும் நவக்கிரகக் கோயில்கள், ப.15.

19. நேர்காணல் : நாள்: 13.7.2015.

20. நலம் தரும் நவக்கிரகக் கோயில்கள், ப.40.

21. சென்னை சிவத்தலங்கள், ப.40.

22. நலம் தரும் நவக்கிரகக் கோயில்கள், ப.81.

23. மேலது, ப.82.

24. நேர்காணல் : நாள்: 17.07.2015.

25. நலம் தரும் நவக்கிரகக் கோயில்கள், ப.84.

26. சென்னை சிவத்தலங்கள், ப.47.

27. நேர்காணல் : நாள் : 19.7.2015

28. நேர்காணல் : திரு. ஞானசிகாமணி, கோயில் குருக்கள், நாள்: 19.7.2015.

29. சென்னை சிவத்தலங்கள், ப.52.

30. நலம் தரும் நவக்கிரகக்கோயில்கள், ப.86.

31. சென்னை சிவத்தலங்கள், ப.53.

32. மேலது, ப.53.

33. மேலது, ப.53.

34. நேர்காணல் : நாள் : 19.7.2015.

35. சென்னை சிவத்தலங்கள், ப.54.

36. மேலது, ப.56.